www.Padasalai.Net www.CBSEtips.in

V10T

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

வகுப்பு 10

தமிழ்

கால அளவு: 1.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **8×1=8**

1) 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது .........

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2) 'கேட்டவர் மகிழப்பாடிய பாடல் இது' - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ..............

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

3) காசிக்காண்டம் என்பது .............

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

ஈ) காசி நகரத்தின் வழிபடுத்தும் நூல்

4) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு ..............

அ) மலேசியா ஆ) சிங்கப்பூர் இ) இலங்கை ஈ) தாய்லாந்து

5) **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க**

அ) கொண்டல் - 1) மேற்கு

ஆ) கோடை - 2) தெற்கு

இ) வாடை - 3) கிழக்கு

ஈ) தென்றல் - 4) வடக்கு

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

6) 'விரிச்சி' - என்னும் சொல் தரும் பொருள் .............

அ) நற்சொல் ஆ) மலை இ) அகன்ற உலகம் ஈ) தோள்

7) விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை ..............

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

8) **பெரியமீசை சிரித்தார்** - தடித்த சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத் தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத் தொகை

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.** **3×2=6**

9) நமக்கு உயிர் காற்று

காற்றுக்கு வரம் மரம் - மரங்களை

வெட்டி எறியாமல்

நட்டு வளர்ப்போம் - இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

10) 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்!'- இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

11) மாஅல் - பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

12) தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தி எடுத்து விருத்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2×2=4**

13) கலைச்சொல் அறிக: அ) Storm - ஆ) Land Breeze

14) சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

'தேனிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே'

15) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) வளி - வாளி ஆ) தொடு - தோடு

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** **3×3=9**

16) சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

17) 'பலர்புகுவாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ' தொடர் விளக்கம் தருக.

18) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

19) 'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!'

இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

20) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'- இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

**V. விடையளிக்க.** **2×5=10**

21) அ) தமிழில் மொழி பெயர்த்துக் தலைப்பிடுக.

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodiesin Percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**(அல்லது)**

ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

22) அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமாற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருப்பது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**VI. ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க.** **1×8=8**

23) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

24) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**VII. அடிபிறழாமல் எழுது.** **3+2=5**

25) அ) 'அன்னை மொழியே! ........... எனத் தொடங்கி பேரரசே! வரை அன்னைமொழியே' பாடலை எழுதுக.

ஆ) அருமை .................. எனத் தொடங்கும் குறளை எழுதுக.

www.Padasalai.Net